| Headline | Kelantan told to act fast to tackle rise in HIV cases in the state | | |
|---|---|---|---|
| MediaTitle | Malaysian Nanban | | |
| Date | 04 Mar 2017 | Color | Black/white |
| Section | News | Circulation | 65,000 |
| Page No | 2 | Readership | 415,000 |
| Language | Tamil | ArticleSize | 109 cm² |
| Journalist | N/A | AdValue | RM 317 |
| Frequency | Daily | PR Value | RM 951 |



# கிளந்தானில் எச்ஐவி தொற்று அதிகரிப்பு

கோத்தா பாரு, மார்ச் 4-

கிளந்தான் மாநிலத்தில் முறையற்ற உடலுறவு மற்றும் ஓரினச்சேர்க்கை காரணமாக எச்ஐவி தொற்று அதிகரித்து வருவதைத் தடுக்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறும் அம்மாநில அரசாங்கத்தை புத்ராஜெயா வலியுறுத்தியிருக்கிறது.

இது குறித்து ஊடக, வட்டார மேம்பாட்டு துணையமைச்சர் டத்தோ அகமட் ஜஸ்லான் யாக்கோப் கூறுகையில், கிளந்தான் மாநில அரசு இந்த விவகாரத்திற்குப் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும், மாறாக, இதனை கூட்டரசு அரசாங்கத்தின் கைகளில் விட்டுவிடக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்.

அதிகரித்து வரும் சம்பவங்கள் மிகவும் கவலைப்பட வேண்டிய ஒன்று. ஒருவருக்குப் பயன்படுத்தப்பட்ட ஊசியை மற்றவருடன் பகிர்வதால் தான் எச்ஐவி பரவுகிறது என்று நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனால் திடீரென இது (உடலுறவு மூலம் பரவுதல்) அதிகரித்திருக்கிறது. என்றார் அவர்.

Powered by: isentia